திருப்பூரில் விசர்ஜன ஊர்வலம்: விடியவிடிய கரைக்கப்பட்ட விநாயகர் சிலைகள்

திருப்பூர், ஆலங்காடு பகுதியில் இந்து முன்னணி சார்பில் வியாழக்கிழமை இரவு நடைபெற்ற விசர்ஜன விழா பொதுக்கூட்டத்தில் பேசுகிறார் மாநிலத் தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம்.

திருப்பூர், செப்.18: திருப்பூரில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த விநாயகர் சிலைகள் வியாழக்கிழமை இரவு தொடங்கி வெள்ளிக்கிழமை அதிகாலை வரை விடியவிடிய பக்தர்களின் பக்தி கோஷங்களுக்கு இடையே ஒன்றாக கரைக்கப்பட்டன.

விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு திருப்பூர் மாநகரில் இந்து முன்னணி சார்பில் சார்பில் 1,100 விநாயகர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு, கடந்த 3 நாள்களாக சிறப்பு பூஜைகள் மற்றும் அன்ன தானங்களுடன் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக, விநாயகர் சிலைகளைக் கரைப்பதற்கான ஊர்வலம், திருப்பூரில் 3 இடங்களில் நடைபெற்றது. அசம்பாவிதங்களைத் தவிர்க்க மாநகர் முழுவதும் போக்குவரத்து மாற்றப்பட்டு, 1,400 போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

திருப்பூர் தெற்கு பகுதியில் வைக்கப்பட்டிருந்த சிலைகள், தாராபுரம் சந்திராபுரம் சோதனைச் சாவடி அருகில் கொண்டுவரப்பட்டு ஊர்வலம் தொடங்கியது. இந்த ஊர்வலத்தை இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம், ஆர்எஸ்எஸ் கோட்ட பொறுப்பாளர் பழனிசாமி ஆகியோர் தொடங்கிவைத்தனர்.

இதில் இந்து முன்னணி கேரள மாநிலத் தலைவர் சசிகலா டீச்சர், மேகாலய முன்னாள் ஆளுநர் சண்முகநாதன், மாநிலச் செயலாளர் தாமோதரன், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் கிருஷ்ணன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

இதேபோல, திருப்பூர் வடக்கு பகுதியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிலைகள் அனைத்தும் பி.என்.ரோடு, மங்கலம், பகுதிக்கு கொண்டுவரப்பட்டு அங்கிருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன. இந்த ஊர்வலத்தை திரைப்பட நடிகர் ரஞ்சித், இந்து முன்னணி மாநிலப் பொதுச் செயலாளர் கிஷோர் குமார், ஈஸ்வரன் ஆகியோர் தொடங்கிவைத்தனர். மாநிலச் செயலாளர் செந்தில்குமார் உள்பட பலர் பங்கேற்றனர். மற்றொரு பிரிவில் நடைபெற்ற ஊர்வலத்தை மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் அன்பகம் திருப்பதி கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

திருப்பூரின் முக்கிய வழியாக சென்ற ஊர்வலம், இறுதியாக மங்கலம் சாலை வழியாக சாமளாபுரம் சென்றடைந்தது. அங்குள்ள குளத்தில் விநாயகர் சிலைகள் அனைத்தும் வியாழக்கிழமை இரவு தொடங்கி வெள்ளிக்கிழமை அதிகாலை வரை விடிய விடிய பக்தர்களின் பக்தி கோஷங்களுக்கு இடையே கரைக்கப்பட்டன.

ஜெய் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் தேசிய அளவிலான கருத்தரங்கம்

A National Level Technical Symposium
"SZIKRA 2.0" 2K26

பல்லடம் அருகேயுள்ள அவிநாசிபாளையம் ஜெய் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கில் பங்கேற்றோர்.

பல்லடம்,செப்.18: பல்லடம் அருகே உள்ள அவிநாசிபாளையம் ஜெய் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கம் அண்மையில் நடைபெற்றது.

கருத்தரங்கிற்கு கல்லூரி தலைவர் எம்.கோவிந்தசாமி தலைமை வகித்தார். முதல்வர் பி.எஸ்.பெரியசாமி முன்னிலை வகித்தார். மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப பொறியியல் துறைத் தலைவர் மேனகா வரவேற்றார். இக்கருத்தரங்கில் தேசிய அளவில் தொழில்நுட்பத்தின் பங்கு குறித்து ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டன. தில் பல்வேறு கல்லூரி மாணவர்கள் 420 மேற்பட்டோர் பங்கேற்றனர். 23 குழுக்களாக 23 ஆய்வுக் கட்டுரைகளை மாணவர்கள் சமர்ப்பித்தனர். கல்லூரியின் துணை முதல்வர் ஜெ. நந்தினி நன்றி கூறினார்.

கணவர் கொலை: மனைவி உள்பட இரண்டு பேருக்கு ஆயுள் தண்டனை

திருப்பூர், செப்.18: கணவரை கொலை செய்த மனைவி உள்பட இரண்டு பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து திருப்பூர் மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் பகுதியைச் சேர்ந்தவர் இளவழகன் (40). எலெக்ட்ரீசியன் வேலை செய்து வந்தார். இவருடைய மனைவி வளர்செல்வி (35). இவர்களுக்கு 3 மகன்கள் உள்ளனர். இளவழகன், தனது குடும்பத்துடன் திருப்பூர் மாஸ்கோ நகரில் வசித்து வந்தார்.

அப்பகுதியில் உள்ள பனியன் நிறுவனத்தில் டெய்லராக வளர்செல்வி வேலை செய்து வந்தார். அப்போது அதே நிறுவனத்தில் டெய்லராக பணிபுரிந்துவந்த திருப்பூர், வெங்கடேஸ்வரா வீதியைச் சேர்ந்த வீரமணி (40)என்பவருடன் வளர்செல்விக்கு பழக்கம் ஏற்பட்டுள்ளது. மேலும் வளர்செல்வியை பார்க்க அவரது வீட்டுக்கு அடிக்கடி வீரமணி வந்து சென்றுள்ளார்.

இதை அறிந்து இருவரையும் இளவழகன் கண்டித்துள்ளார். இருப்பினும் இருவரும் தங்கள் சந்திப்பை கைவிடவில்லை. இதனால் வளர்செல்விக்கும், இளவழகனுக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் 2019 மார்ச் 18-ஆம் தேதி இரவு இளவழகன் வீட்டுக்கு வீரமணி வந்துள்ளார். அப்போது அவர்களுக்குள் வாய்த் தகராறு ஏற்பட்டதில் கோபமடைந்த வீரமணி, கத்தியால் குத்தியதில் இளவழகன் படுகாயமடைந்தார். அவரை அருகே இருந்தவர்கள் மீட்டு திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்துவிட்டார்.

இதுகுறித்து திருப்பூர் வடக்கு போலீஸார் கொலை வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இதில்வேறு ஒருவருடன் மனைவி பழகுவதை கண்டித்ததால் வளர்செல்வியும், வீரமணியும் திட்டமிட்டு இளவழகனை கொலை செய்தது தெரியவந்தது. இதைத்தொடர்ந்து வளர்செல்வியையும், வீரமணியையும் போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இதுதொடர்பான வழக்கின் விசாரணை திருப்பூர் 2-ஆவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இதில் கொலை குற்றத்துக்காக வீரமணி, வளர்செல்வி ஆகிய இருவருக்கும் ஆயுள் தண்டனை, தலா ரூ.12 ஆயிரம் அபராதம் விதித்து நீதிபதி கனகராஜ் வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கில் அரசுத் தரப்பில் வழக்குரைஞர் பிரபாகரன் ஆஜரானார்.

சிக்கண்ணா கல்லூரி விளையாட்டு அரங்கில் முதல்வர் கோப்பை போட்டிகள் தொடக்கம்

திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி வளாக விளையாட்டு அரங்கில் முதல்வர் கோப்பை போட்டிகளை வெள்ளிக்கிழமை தொடங்கிவைத்த மாவட்ட ஆட்சியர் மனீஷ்.

திருப்பூர், செப்.18: திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி வளாக விளையாட்டு அரங்கில் மாவட்ட அளவிலான முதல்வர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை ஆட்சியர் மனீஷ் வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார்.

ஆண்டுதோறும் முதல்வர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை, மாவட்டம், மண்டலம் மற்றும் மாநில அளவில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நடத்தி வருகிறது. திருப்பூர் மாவட்டம் முழுவதும் உள்ள பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு ஊழியர்கள் என 5 பிரிவுகளில் மாவட்ட மற்றும் மண்டல அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

இப்போட்டிகளில் பங்கேற்பதற்காக திருப்பூர் மாவட்டத்தில் 63,639 பேர் இணையதளம் மூலமாக பதிவு செய்துள்ளனர். இப்போட்டிகளில் கல்லூரி மாணவர்கள் பிரிவு கூடைப்பந்து போட்டியில் ஆண்கள் 5 அணிகளும், பெண்கள் 4 அணிகளும், ஹாக்கி போட்டியில் ஆண்கள் 4 அணிகளும், பெண்கள் 4 அணிகளும், பால் பாட்மின்டன் போட்டியில் ஆண்கள் 5 அணிகளும், பெண்கள் 6 அணிகளும் பங்கேற்றன.

அரசுப் பணியாளர்கள் பிரிவு இறகுப்பந்து (ஒற்றையர்) போட்டியில் ஆண்கள் 35 பேரும், பெண்கள் 28 பேரும், பால் பாட்மின்டன் (இரட்டையர்) போட்டியில் ஆண்கள் 25 அணிகளும், பெண்கள் 14 அணிகளும், பொதுமக்கள் பிரிவு பாட்மின்டன் (ஒற்றையர்) போட்டியில் ஆண்கள் 28 பேரும், பாட்மின்டன் (இரட்டையர்) போட்டியில் ஆண்கள் 23 அணிகளும் பங்கேற்றன.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட விளையாட்டு அலுவலர் ரகுகுமார், பயிற்றுநர்கள், நடுவர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தாராபுரம் இடைத்தேர்தல்: அதிமுகவுக்கு கொங்குநாடு விவசாயிகள் கட்சி ஆதரவு

திருப்பூர்,செப்.18: தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் அதிமுகவுக்கு கொங்குநாடு விவசாயிகள் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் ராஜாமணி, மாநிலத் தலைவர் முருகேசன் ஆகியோர் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமிக்கு அனுப்பியுள்ள கடிதம்:

தேர்தல் வாக்குறுதிப்படி விவசாயக் கடனை முழுமையாக தள்ளுபடி செய்யாதது, அபரிமிதமாக வரும் மின்கட்டணத்தை குறைக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்காதது, கடுமையாக உயர்ந்துள்ள விலைவாசியை கட்டுப்படுத்தத் தவறியது உள்ளிட்டவற்றுக்காக தவெக அரசைக் கண்டித்து கொங்குநாடு விவசாயிகள் கட்சி மாநில, மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதேபோல தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் அதிமுகவுக்கு ஆதரவு அளிப்பது எனவும், தாராபுரம் தொகுதி முழுவதும் அதிமுக வேட்பாளரின் வெற்றிக்கு கடுமையாக உழைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளனர்.

இடைத்தேர்தல்களில் திமுக கூட்டணிக்கு ஆதித்தமிழர் ஜனநாயகப் பேரவை ஆதரவு

திருப்பூர்,செப்.18: மதுராந்தகம், தாராபுரம் ஆகிய சட்டப்பேரவைத் தொகுதிகளின் இடைத்தேர்தல்களில் திமுக தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவு அளிப்பது என ஆதித்தமிழர் ஜனநாயகப் பேரவையின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில், முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ஆதித்தமிழர் ஜனநாயகப் பேரவை சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை:

ஏற்கெனவே நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல், மக்களவைத் தேர்தல்களில் தொடர்ந்து திமுக கூட்டணிக்கு ஆதரவளித்து வரும் நிலையில், அதன் தொடர்ச்சியாக இந்த இடைத்தேர்தல்களிலும் திமுக கூட்டணியை ஆதரிப்பது என பேரவை நிர்வாகக் குழு முடிவு செய்துள்ளது.

அதன்படி தாராபுரம் தொகுதியில் போட்டியிடும் திமுக கூட்டணி வேட்பாளர் சுகன்யாவை ஆதித்தமிழர் ஜனநாயகப் பேரவையின் நிறுவனத் தலைவர் அ.சு.பவுத்தன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து ஆதரவு தெரிவித்தனர். மேலும், திமுக கூட்டணி வேட்பாளருக்கு ஆதரவாக தேர்தல் பணிகளில் ஈடுபடுவது குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

HDFC BANK

ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்
கிளை : எண்.56/3, முதல் தளம், MSRK டவர், பாரதி பூங்கா 2வது குறுக்கு, சாயிபாபா காலனி,
கோயமுத்தூர்-641 011. போன்: (0422) – 4301152, 4301153, 4301154. இணையதளம்: www.hdfcbank.com
CIN L65920MH1994PLC080618

கேட்பு அறிவிப்பு

2002ம் ஆண்டின் செக்யூரிடைசேஷன் அண்டு ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்டு என்போர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் 2002ம் ஆண்டின் செக்யூரிட்டி இன்டரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) ரூல்சின் விதி 3ன் கீழ் விடுக்கப்படுவது.

மேற்படி சட்டத்தின் பிரிவு 13(12) மற்றும் மேற்படி செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) ரூல்சின் விதி எண்.3–ன் கீழ் **ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்** (முன்னாள் ஹெச் டி எஃப் சி லிமிடெட், ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்டுடன், மாண்பமை NCLT மும்பையின் ஒருங்கிணைப்புத் திட்ட ஒழுங்கமைவின்படி அங்கீகரிக்கப்பட்ட **17.03.2023** தேதிய உத்தரவின் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது) நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக (ஆதரைஸ்டு ஆபீசர்) நியமிக்கப்பட்ட கீழே கையொப்பமிட்டுள்ளவர், தனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ், கீழ்க்கண்ட பட்டியலில் உள்ள, கடன்தாரர்(கள்) சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ், கீழ்வரும் தேதியில் கேட்புத் தொகை அறிவிப்புகள் (டிமாண்ட் நோட்டீஸ்) விடுத்து அதன் மூலம் அறிவிப்பில் கண்ட தொகையினை அதன் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று கோரினார். மேலும் அந்த அறிவிப்புகளை அந்தந்த கடன்தாரர்(கள்) இறுதியாகத் தெரிந்த விலாசத்தில் ஒட்ட வகை செய்தார். மேற்கூறிய அறிவிப்புகளின் உண்மை நகல்கள் அவ்வதிகாரியிடம் உள்ளதால் கீழ்வரும் கடன்தாரர்களுக்கு அவை தேவை இருப்பின், வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் அன்னாரை அணுகிப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கூறிய நிலையில் இந்த கேட்புத் தொகை அறிவிப்பின் மூலம் மேற்படி கடன்தாரர்(கள்) தாங்கள் எங்களுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் அவருக்கு நேரே கொடுக்கப்பட்டுள்ள தேதி வரையிலான தொகையினை இந்த அறிவிக்கை வெளியீட்டு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் கேட்புத் தொகை அறிவிப்பில் கண்டுள்ள விபரப்படி 18 சதவிகித வட்டி விகிதத்தில், கீழே நிலுவைத் தொகைக்கான கட்டத்தில் தரப்பட்டுள்ள தேதியிலிருந்து தொகைகளைச் செலுத்தும் காலம் வரையிலும் **ஹெச் டி எஃப் சி** –க்கு செலுத்த வேண்டுமாறு மீண்டும் ஒருமுறை கோரப்படுகிறார்கள். மேலும் கடனை திருப்பிச் செலுத்துதல் தொடர்பாக, கீழே கொடுக்கப்பட்டுள்ள சொத்தினை கடன் பத்திர பாதுகாப்பிற்காக **ஹெச் டி எஃப் சி**–க்கு கடன்தாரர் அடமானம் செய்துள்ளார். பிணையமாக்கப்பட்ட சொத்துக்களை மீட்பதில் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளும்படி, சட்டத்தின் பிரிவு 13(8)க்கு கடன்தாரர்(கள்) கவனம் ஈர்க்கப்படுகிறது.

வ எ ண்.	கடன்தாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) பெயர் மற்றும் விலாசம்	மொத்த கடன் நிலுவைத் தொகை	கேட்புத் தொகை அறிவிப்பு தேதி	ஈடுபெற்ற சொத்திருப்பு விவரம் (அசையாச் சொத்து)
(a)	(b)	(c)	(d)	(e)
1.	**திருமதி. ஜானகி** க/பெ சக்திவிஜய் G, மனை எண்.40, சர்வே எண்.447/2 KRC சாந்திநிகேதன் லேஅவுட் பழங்கரை கிராமம் அவிநாசி, திருப்பூர் – 641 654 **மேலும் :** எண்.76, அகில் நகர் ராகவேந்திரா நகர் 2வது வீதி திருமுருகன்பூண்டி திருப்பூர் – 641 652. **மேலும் :** குளோபல் ரோட்டரி எண்.5/12, சைமா ஃபினிஷர் பில்டிங் கரைய தோட்டம் பழங்கரை, அவிநாசி திருப்பூர் – 641 654 **மேலும் :** எண்.15/1, காமராஜர் நகர் ஓரிச்சேரி, ஓரிச்சேரி புதூர் பவானி, ஈரோடு – 638 315. **திரு. G.சக்திவிஜய்** த/பெ குருசாமி அகில் நகர் ராகவேந்திரா நகர் 2வது வீதி திருமுருகன்பூண்டி திருப்பூர் – 641 652.	**31.07.2026* தேதி வரை மொத்தத் தொகை ரூ.1,79,80,131/–**	**07.09.2026**	திருப்பூர் பதிவு மாவட்டம், அவிநாசி சார் பதிவு மாவட்டம், அவிநாசி தாலூகா, பழங்கரை கிராம பஞ்சாயத்து போர்டு எல்லைக்குள், பழங்கரை கிராமம், சர்வே எண்.447/2, இதிலுள்ள 4.23 புஞ்சை ஏக்கர் ரூ.5.80 ல், வடபுற பகுதியில், குறிப்பிட்ட போர்ஷன் மற்றும் அதனோடு சர்வே எண்கள் 444/2, 444/3, 446/1A மற்றும் 446/1B ல் உள்ள குறிப்பிட்ட போர்ஷனுடன் சேர்த்து மொத்தம் 5.54 ஏக்கர், மேற்படி நிலத்தில் லேஅவுட் அமைக்கப்பட்டு, கோயம்புத்தூர் நகர மற்றும் ஊரகத் திட்ட துணை இயக்குநரிடமிருந்து ம.வ./கோ. மா.எண்.251/2018, தேதி : 22.05.2018 ல் அங்கீகாரம் பெற்ற, மேலும் பழங்கரை கிராம பஞ்சாயத்து போர்டின், கட்டிடக் கட்டுமான அனுமதி எண்.57/2018–2019 ல் அங்கீகாரத்தைப் பெற்றதில், 'KRC சாந்திநிகேதன்' என்கிற பெயரிலமைந்த லேஅவுட்டில் அடங்கியதும் அதன் பகுதியுமான நிலம் மற்றும் கட்டிடத்தின், மனை எண்.40 க்கு **எல்லைகள் விபரம் :** 28 அடி அகல கிழமேல் ரோடுக்கு மற்றும் S.வசந்தகுமார், M.ரவி மற்றும் S.கிருஷ்ணராஜ் ஆகியோருக்குச் சொந்தமான மீதமுள்ள போர்ஷனுக்கு வடக்கு, மனை எண்.41 க்குத் தெற்கு, 28 அடி அகல தென்வடல் ரோடுக்கு மற்றும் S.வசந்தகுமார், M.ரவி மற்றும் S.கிருஷ்ணராஜ் ஆகியோருக்குச் சொந்தமான மீதமுள்ள போர்ஷனுக்குக் கிழக்கு, மனை எண்.39 க்கு மேற்கு. **இதன் மத்தியில்,** கிழமேல் வடபுறம் 62 அடி, கிழமேல் தென்புறம் 62 அடி, தென்வடல் கிழபுறம் 60 ¼ அடி, தென்வடல் மேற்புறம் 60 ¼ அடி, சேர்ந்த மொத்தம் 3735 ½ சதுரடி அல்லது 347.22 சதுர மீட்டர் காலி நிலம் முழுமையும், லேஅவுட் ரோடுகளில் வழக்கமான வழித்தட உரிமைகளுடன். தற்சமயம் மனையின் மீது கட்டிடம் எதுவும் இல்லை. இம்மனையானது சர்வே எண்.447/2 ல், சொத்தில் பின்னாளில் ஏற்படுத்தப்படும் வளர்ச்சி மற்றும் கட்டுமானத்துடன் உள்ளது.

* மேலும் **01.08.2026** விருந்து 18 சதவீத வருட வட்டி, பிற செலவுகளுடன், தொகையை திருப்பிச் செலுத்தும் காலம் வரை.

மேற்கூறியபடி **ஹெச் டி எஃப் சி**–க்கு திருப்பிச் செலுத்தத் தவறும்பட்சத்தில் கடன்தாரர்(கள்) மீது இச்சட்டப்பிரிவு 13(4)ன் கீழ் மற்றும் அதற்குப் பொருத்தமான ஏனைய விதிகளின் அடிப்படையில் மேற்படி பிணையச் சொத்திற்கு/அசையாச் சொத்திற்கு எதிராக **ஹெச் டி எஃப் சி**–ன் மூலம் நடவடிக்கை தொடரப்படுவதோடு, அதற்குண்டான செலவுகளுக்கும், விளைவுகளுக்கும் சம்பந்தப்பட்ட கடன்தாரர்களே பொறுப்பு.

மேற்படி கடன்தாரர்(கள்) மேலே குறிப்பிட்டுள்ள சொத்தினை **ஹெச் டி எஃப் சி** –ன் எழுத்து மூல முன்னிசைவு இல்லாமல் கிரையமோ, குத்தகையோ அல்லது வேறு எந்த வகையிலோ உரிமை மாற்றம் செய்ய மேற்படி சட்டம் தடை செய்கிறது. இதை யாதொருவர் மீறினாலோ அல்லது மீறத் தூண்டினாலோ மேற்படி சட்டத்தின்/விதியின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

தேதி : 18.09.2026
இடம் : கோயமுத்தூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம் : ஹெச் டி எஃப் சி பேங்க் ஹவுஸ், சேனாபதி பபட மார்க், லோயர் பேரல் (மேற்கு), மும்பை – 400020

kotak

கோட்டக் மஹிந்திரா பிரைம் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 27, BKC, C-27, G-பிளாக், பாந்த்ரா குர்லா வளாகம், பாந்த்ரா (E), மும்பை-400051, கிளை அலுவலகம்: எண் 402L, சாம்சன் டவர்ஸ், 7-வது தளம், பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை - 600 008

சுவாதீன (POSSESSION) அறிவிப்பு [விதி 8(1)]

ஆகஸ்ட் 15, 2025 தேதியிட்ட தீர்மானத்தின்படி, கீழே கையொப்பமிட்டுள்ளவர், 27-BKC, கீழ் தளம், மனை எண் C-27, G பிளாக், பாந்த்ரா குர்லா வளாகம், பாந்த்ரா (E), மும்பை 400051 எனும் முகவரியில் பதிவு அலுவலகத்தையும், எண்.402L, சாம்சன் டவர்ஸ், 7-வது தளம், பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை - 600008, இந்தியா எனும் முகவரியில் தனது ஒரு கிளை அலுவலகத்தையும் கொண்டுள்ள **கோட்டக் மஹிந்திரா பிரைம் லிமிடெட்-ன் (KMPL)** (இனி 'KMPL' கம்பெனி எனக் குறிப்பிடப்படும்) அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் படி (54/2002) மேற்படி சட்டம் பிரிவு 13(12) கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழும், தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, கடன்தாரர்கள் **1.திரு. பிரகாஷ் P, S/O திரு. பழனிசாமி,** 688/41, குன்னத்தூர் சாலை, பெருந்துறை V.M காம்ப்ளக்ஸ், கருமாண்டிசெல்லிபாளையம் அஞ்சல், ஈரோடு - 638052, தமிழ்நாடு-இந்தியா. **2. திருமதி. கிருத்திகா P, W/O திரு. பிரகாஷ் P,** 688/41, குன்னத்தூர் சாலை, பெருந்துறை V.M காம்ப்ளக்ஸ், கருமாண்டிசெல்லிபாளையம் அஞ்சல், ஈரோடு - 638052, தமிழ்நாடு-இந்தியா. **மேலும் முகவரி:** எண் 12, H.M காம்ப்ளக்ஸ், R & R நிறுவனத்திற்கு அருகில், திருப்பூர்-641687, தமிழ்நாடு-இந்தியா **அவர்களுக்கு 22.05.2026 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பினை (DEMAND NOTICE)** அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் அதில் காணும் **21/05/2026 அன்றுள்ளபடியான தொகை ரூ.55,48,538.58/-** (ரூபாய் ஐம்பத்தைந்து லட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து ஐந்நூற்று முப்பத்தெட்டு மற்றும் ஐம்பத்தெட்டு பைசா மட்டும்) **(21/05/2026 வரையான வட்டி இத்தொகையில் சேர்க்கப்பட்டுள்ளது)** செலுத்துமாறு கோரியிருந்தார்.

ஆனால், கடன்தாரர்கள் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்கள் மேற்படி தொகையை முழுவதும் செலுத்தத் தவறிவிட்டதால், கடன்தாரர்கள் /அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய விதிகள் 8-ன் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை **15 செப்டம்பர் 2026 தேதியில்** வங்கியின் அதிகாரபூர்வ அலுவலர் தமது **சுவாதீனத்தில் (POSSESSION)** எடுத்துக் கொண்டுள்ளார்.

எனவே, கடன்தாரர்கள் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்கள் மற்றும் முக்கியமாக பொதுமக்களுக்கு இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமாகியுள்ள மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ/நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது **KMPL-க்குச் செலுத்தவேண்டிய 21/05/2026 அன்றுள்ளபடியான தொகை ரூ.55,48,538.58/- (ரூபாய் ஐம்பத்தைந்து லட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து ஐந்நூற்று முப்பத்தெட்டு மற்றும் ஐம்பத்தெட்டு பைசா மட்டும்) (21/05/2026 வரையான வட்டி இத்தொகையில் சேர்க்கப்பட்டுள்ளது)** மற்றும் வட்டி சேர்த்து செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

கடனுக்கு ஈடான சொத்துகளை மீட்பது தொடர்பான கால அவகாசம் தொடர்பான மேற்படி சட்டம் பிரிவு 13, உட்பிரிவு 8-ன் ஷரத்துகளை கவனத்தில் கொள்ளுமாறு கடன்தாரர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

அசையாச் சொத்து விவரம்: அட்டவணை 'A' (அசையாச் சொத்து): சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், அமைவிடம் திருப்பூர் பதிவு மாவட்டம், நல்லூர் சார்-பதிவு மாவட்டம், திருப்பூர் தெற்கு வட்டம், நல்லூர் கிராமம், S.F.No.314/2B பகுதி இதில் 2.92.5 ஹெக்டேர் (அல்லது 7.22 ஏக்கர்) நிலம், 0.09 ஏக்கர் கிழக்குப்பகுதி போக மீதமுள்ள 7.13 ஏக்கர் நிலம்; S.F.No.314/2A இதில் 0.77.5 ஹெக்டேர் (அல்லது 1.92 ஏக்கர்) நிலம் தெற்குப் பகுதி 0.59 ஏக்கர் நிலம்; S.F.No.314/2A மற்றும் 29 பகுதி இதில் கிழக்குப்பகுதி 0.18 ஏக்கர் நிலத்தில் 0.09 ஏக்கர் நிலம்; ஆக மொத்தம் 7.81 ஏக்கர் நிலத்தில், 2.93 ஏக்கர் நிலம் ஏற்கனவே விற்கப்பட்டது. மீதமுள்ள 4.88 ஏக்கர் நிலம் 'சோரன் எம்பையர் கார்டன்-1) என்ற பெயரில் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் மனை எண் 85-ன் எல்லைகள் மற்றும் அளவீடுகள் பின்வருமாறு: எல்லைகள்: மனை எண் 84க்கு **வடக்கு**; மனை எண்கள் 316 & 315-க்கு **கிழக்கு**,- மனை எண் 86-க்கு **தெற்கு**; 30 அடி அகல தெற்கு-வடக்கு லேஅவுட் சாலைக்கு **மேற்கு**. அளவீடுகள்: கிழக்கு-மேற்கு (வடக்கு பக்கம்): 56 3/4 அடி; கிழக்கு-மேற்கு (தெற்கு பக்கம்):57 அடி; தெற்கு-வடக்கு (கிழக்கு பக்கம்): 30 அடி; தெற்கு-வடக்கு (மேற்கு பக்கம்): 30 1/4 அடி. மொத்தம் 1706 சதுர அடி (அல்லது 158.49 சதுர மீட்டர்) பரப்பளவு நிலம் மற்றும் அதன் மீதான கட்டிடம்; அத்துடன் லேஅவுட் சாலைகளைப் பயன்படுத்தி உள்ளே செல்ல வெளியே வரும் அனைத்து இதர உரிமைகள் மற்றும் சாலைகளைப் பயன்படுத்தும் வழக்கமான பாதை உரிமைகள் மற்றும் அதனுடன் இணைந்த அனைத்து சாதனங்கள் கதவு எண் 85, மதிப்பீட்டு எண் (பழைய) 032/35008461, (புதிய) 032/047/900807; குடிநீர் இணைப்பு எண் (பழைய) 032/35015962, (புதிய) 032/047/901710; மின் இணைப்பு எண் 03-210-001-2070. மனை அமைவிடம் பட்டா எண் 1027-ன் படி புதிய S.F.No.314/2A3A. வழித்தட ஆவணம் எண் 1257/1996-ன் படி, SF எண் 337/2 சொத்திற்கு வழித்தட உரிமைகள். இச்சொத்துக்கான பதிவு அங்கீகாரம் நல்லூர் பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து No.Ka.No.1747/2005-ன் கீழ் பெறப்பட்டுள்ளது. மேலும், அனைத்து கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள், தற்போது மற்றும் எதிர்காலத்தில் பூமியுடன் இணைக்கப்பட்டுள்ள, இணைக்கப்படும் அல்லது பூமியுடன் நிரந்தரமாக பிணைக்கப்பட்டுள்ள, பிணைக்கப்படும் எந்தவொன்றும் மற்றும் அதன் அனைத்து ஈஸ்மெண்டரி மற்றும் மாறுதல் உரிமைகள்.

எனவே, மேற்படி சட்டம் 13(13)-ன் கீழ் வங்கியின் எழுத்து மூலமான முன் KMPL-ன் ஒப்புதல் இல்லாமல் மேற்காணும் கடனுக்கு ஈடான சொத்துகளை கிரயம், குத்தகை அல்லது வேறு இதர வழிமுறைகளில் உரிமை மாற்றி தருவதற்கு அல்லது விற்பதற்கு அல்லது பேரம் பேசுவதற்கு உங்களுக்கு இதன் மூலம் தடை செய்யப்படுகிறது/தடுக்கப்படுகிறது.

(அசையும் சொத்து)

கார் தயாரிப்பு	கார் மாடல்	கார் நிறம்	சேசிஸ் எண்	என்ஜின் எண்	கார் பதிவு எண்	கார் பதிவு ஆண்டு
வோக்ஸ்-வேகன்	டைகுன் டாப் லைன் TSI MT 1.0	வைல்ட் செர்ரி சிவப்பு	MEXA23C W0PT0115 50	DTB112 881	TN 39 DD 7888	20-10-2023

தேதி:15-09-2026
இடம்:திருப்பூர்

ஒம்/- அதிகாரபூர்வ அலுவலர்
கோட்டக் மஹிந்திரா பிரைம் லிட்.,

பாங்க் ஆஃப் பரோடா
बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda
India's International Bank
119 FOUNDATION YEAR
LEADING WITH TRUST

பேங்க் ஆப் பரோடா
கிளை : MSME திருப்பூர் : எண்.10, அவிநாசி ரோடு, திருப்பூர் கிளப் எதிரில், திருப்பூர்,
போன் எண்கள் : 0421–2240308, 2265901, மின்னஞ்சல் : VJTIMS@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு.
கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமின்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி **"எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே"** மற்றும் **"பொறுப்பேற்காத நிலையில்"** எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / உத்தரவாதம்அளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் சுருக்க விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன்	மொத்த நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	சுவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
M/s.இண்டிகோ கார்ப்பொரேஷன் (கடன்தாரர்), **பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள்,** எண்.1, பூ தோட்டம், முருங்கபாளையம், குமார் நகர், அவிநாசி ரோடு, திருப்பூர் – 641 603. **திருமதி.கலாமணி (M/s.இண்டிகோ கார்ப்பொரேஷனின் பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர்),** க/பெ.திரு.நடராஜ், எண்.1, பூ தோட்டம், முருங்கபாளையம், அவிநாசி ரோடு, காந்தி நகர் அஞ்சல், திருப்பூர் – 641 603. **திரு.திருப்பூர் நடராஜ் நவீன் (M/s.இண்டிகோ கார்ப்பொரேஷனின் பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர்),** த/பெ.திரு.நடராஜ், எண்.1, பூ தோட்டம், முருங்கபாளையம், அவிநாசி ரோடு, காந்தி நகர் அஞ்சல், திருப்பூர் – 641 603.	திருப்பூர் பதிவு மாவட்டம், திருப்பூர் இணை I சார் பதிவு மாவட்டம், திருப்பூர் தாலூகா, திருப்பூர் மாநகராட்சி நகர எல்லைக்குள், வார்டு எண்.21, ஸ்ரீ வெங்கடேஸ்வரா நகர் பகுதி, பூதோட்டம், எண்.14 தொட்டிபாளையம் கிராமம், பொது சர்வே எண்.120/1, தொடர்புடைய டவுன் சர்வே எண்.7/1A2, பிளாக் எண்.2, வார்டு "B", இதிலுள்ள 5,936 சதுர மீட்டர் நிலம் அமைந்த **எல்லைகள் விபரம் :** டவுன் சர்வே எண்.7/1B ல் உள்ள நிலத்தின் ஒரு பகுதிக்கு வடக்கு, இட்டேரிக்குத் தெற்கு, நடராஜ் மற்றும் பிற இருவர் தக்கவைத்திருந்த டவுன் சர்வே எண்.7/1A நிலத்துக்குக் கிழக்கு, நடராஜ் மற்றும் பிற இருவர் தக்கவைத்திருந்த டவுன் சர்வே எண்.7/1A நிலத்துக்கு மேற்கு. இவ்வெல்லைகளுக்கிடையில், **அளவுகளாக,** கிழமேல் வடபுறம் – 42.70 மீட்டர் (140 அடி), கிழமேல் தென்புறம் – 42.70 மீட்டர் (140 அடி), தென்வடல் கிழபுறம் – 134 மீட்டர் (439.5 அடி), தென்வடல் மேற்புறம் – 144 மீட்டர் (472.25 அடி). ஆகச் சேர்ந்த மொத்தம் மேற்படி 5936 சதுர மீட்டர் அல்லது 63820 சதுரடி நிலம் (சமீபத்திய வருவாய் உட்பிரிவின்படி, மேற்படி நிலமானது டவுன் சர்வே எண்.7/1A2 ன் பகுதி, வார்டு 'B', பிளாக் எண்.2 ல், 2.46.10 ஹெக்டேராக பட்டா எண்.7898 ல் உள்ளது) அனைத்து வழித்தட உரிமைகள் மற்றும் அங்குள்ள அனைத்துப் பிற பாத்திய அனுபந்தங்களுடன். திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்டு அமைந்துள்ள மேற்படி சொத்து, திரு. நடராஜ் மனைவி திருமதி. கலாமணிக்குச் சொந்தமாயுள்ளது.	அனைத்து கடன்வசதிகளுக்கும் மொத்த நிலுவைத் தொகை 17.09.2026 தேதியன்று, **ரூ.1,57,24,159.96** (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஏழு லட்சத்து இருபத்து நான்காயிரத்து நூற்று ஐம்பத்து ஒன்பது மற்றும் பைசா தொண்ணூற்று ஆறு மட்டும்) மற்றும் செலவுகள், கட்டணங்கள்	**28.10.2026** பிற்பகல் **2.00 மணி** முதல் மாலை **6.00 மணி** வரை	1. **ரூ.13,18,50,000/–** (ரூபாய் பதின்மூன்று கோடியே பதினெட்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) 2. **ரூ.1,31,85,000/–** (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து ஒரு லட்சத்து எண்பத்து ஐந்தாயிரம் மட்டும்) 3. **ரூ.1,00,000/–** (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்)	அடையாள சுவாதீனம் வங்கியானது சொத்தினை அந்த நிலையிலேயே ஒப்படைப்பு செய்யும்	**26.10.2026** காலை **11.00 மணி** முதல் மாலை **4.00 மணி** வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு **https://bankofbaroda.bank.in/e-auction** மற்றும் ஆன்லைன் ஏலத்தின் போர்டல் **https://baanknet.com** இணையதளங்களில் லிங்க்–ல் பார்வையிடலாம். மேலும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை **மொபைல் : 98348 23416;** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 18.09.2026 / இடம் : திருப்பூர்

(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி), பேங்க் ஆஃப் பரோடா